07.03.2024

**OS. 242 / 2023 வா. சா. 1. வெள்ளைச்சாமி , த/பெ. மெய்யப்பன்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது ஊர் கீழையூர் என்றால் இல்லை, பட்டறைச்சேரி கிராமம். பட்டறைச்சேரி என்பது கீழையூருக்கு அருகில் உள்ள கிராமம் என்றால் இல்லை, இரண்டும் வெவ்வேறு பஞ்சாயத்து. 2–ம் அடுத்தடுத்த பஞ்சாய்த்து என்றால் இல்லை. கீழையூரிலிருந்து பட்டறைச்சேரி எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் 3 கி.மீ. தூரம். வழக்கு சொத்து அரிமளம் கிராமத்திற்குட்பட்டது என்றால் சரிதான். அரிமளம் கிராமத்திற்கும் எங்கள் கிராமத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 12 கி.மீ. இருக்கும். அரிமளம் கிராமத்தில் எனக்கு எந்த சொத்தும் கிடையாது என்றால் சரிதான், பெண் கட்டியது அரிமளத்தில்தான். பிரதிவாதி லெட்சுமி அரிமளம் கிராமத்தி சேர்ந்தவர் என்றால் சரிதான். வழக்கு சொத்து என்பது பிரதிவாதி லெட்சுமி குடியிருக்கும் வீடு என்றால் இல்லை, எங்களுக்கு கொடுத்தது ஓட்டு கொட்டகை, அதற்கு அருகில்தான் அவர் குடியிருக்கிறார். வழக்கு சொத்திற்கு எந்த புறத்தில் பிரதிவாதி லெட்சுமி குடியிருக்கிறார் என்றால் அவர் மேல்புறத்தில் குடியிருக்கின்றார். என் அக்கா பெயர் செல்லம்மாள் என்றால் சரிதான். என் அக்கா செல்லம்மாள் அரிமளத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் தற்போது கடை வைத்துள்ளேன். வா.சா.ஆ 1 –ன் காலமான 2016–ல் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் வெளிநாட்டில் இருந்தேன். வழக்கு சொத்து மொத்தம் 5 சென்ட் இடம் என்றால் 6 சென்ட் இடம். 6 சென்ட் இடத்தினை பொருத்துதான் நான் வழக்கில் பரிகாரம் கோருகிறேனா என்றால் ஆமாம். வழக்கு கிராமத்தில் குழி கணக்கிலா, சென்ட் கணக்கிலா நிலம் விலை பேசப்படுகிறது என்றால் சென்ட் கணக்கில் பேசப்படுகிறது. 2016–ம் ஆண்டு காலத்தில் வழக்கு சொத்து உள்ள இடத்தில் அரசு மதிப்பு நிலத்திற்கு எவ்வளவு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அப்பொழுது அதன் சந்தை மதிப்பு தெரியுமா என்றால் ரூ.1,50,000/– ஒரு சென்ட் என பேசினார்கள். வழக்கு சொத்திற்கு ஒரு சென்ட் எவ்வளவு என விலை நிர்ணயம் செய்தோம் என்றால் ரூ.1,50,000/– ஒரு சென்ட் என நிர்ணயம் செய்தோம். ஒரு சென்டிற்கு ரூ.1,50,000/– என மொத்தம் எவ்வளவு தொகை கிரய தொகையாக நிர்ணயித்தோம் என்றால் ரூ.9 லட்சம் நிர்ணயித்தோம். ரூ.9 லட்சம் என எந்த தேதியில் எங்கு வைத்து நிர்ணயித்தோம் என்றால் புதுப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் 20.06.2016–ல் நிர்ணயித்தோம். எத்தனை மணிக்கு விலையை நிர்ணயித்தோம் என்றால் 8.30 லிருந்து 9.00 மணிக்குள் இருக்கும். அவர்கள் தரப்பில் கணவன், மனைவி என அவர்கள்

இருவரும் , எங்கள் தரப்பில் நானும் என் மாமனாரும், நண்பர்களாகிய பெரியோர்கள் முன்னிலை வைத்து விலை நிர்ணயம் பேசினோம். பாண்டி, வீரப்பன், சுப்பையா ஆகியோர் முன்னிலையில் பேசினோம். வா.சா.ஆ 1 ஆவணத்தில் ஒரு வருட காலத்தில் அவகாசம் கண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். அன்றைய கால கட்டத்தில் வழக்கு சொத்திற்கான கிரய பத்திரம் பிரதிவாதி பெயரில் இருந்தது என்றால் சரிதான். அன்றைய தேதியில் கிரய ஆவணம் ஏற்படுத்தி கொடுக்க பிரதிவாதி லெட்சுமிக்கு எந்தவித தடையும் இல்லை என்றால் என்னால் அன்றைய தினம் ரூ.4 லட்சம்தான் பணம் தேட முடிந்தது, மீதத் தொகைக்காகத்தான் கால அவகாசம் போடப்பட்டது. இந்த வா.சா.ஆ1 ஆவணம் ஏற்பட்ட 2 மாத காலத்திற்குள் நான் மீதக் கிரய தொகையை தயார் செய்து கொண்டேன். எவ்வளவு நாட்கள் எடுத்துக்கொண்டேன் என்றால் 60 நாட்கள் இருக்கும். வெளிநாட்டில் வேலைபார்த்த என் விடுப்பு சம்பளம் வந்தது , அதன் மூலம் மீதக் கிரய தொகையை தயார்செய்தேன். நான் வெளிநாட்டில் பிளம்பராக கல்ஃப் எரக்சன் நிறுவனத்தில் வேலை பார்த்தேன். எனக்கு அறந்தாங்கியில் உள்ள எஸ்.பி.ஐ வங்கியில் கணக்கு உள்ளது. இந்த வங்கி கணக்கிற்குதான் வெளிநாட்டிலிருந்து எனக்கு பணம் அனுப்பப்பட்டது. நான் தயார் செய்ததாக சொல்லும் மீதக் கிரய தொகையும் இந்த வங்கி கணக்கிற்குதான் அனுப்பப்பட்டதா என்றால் ஆமாம். அந்த வங்கி கணக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**